செ.வெ.எண். 18/2022 நாள்:08.01.2022

**தற்போது கொரோனா நோய் தொற்று அதிகரித்து வரும் நிலையில் கொரோனா நோய் தொற்றாளர்கள் தங்களது சிகிச்சைக்காக எந்த மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்பது தெரியாமல் அலைக்கழிக்கப்படுவதை தவிர்க்கும் பொருட்டும், திருப்பூர் மாவட்டத்தில் திருப்பூர் மாநகராட்சியில் 4, ஊரக பகுதிகளில் 15 ஆக மொத்தம் 19 உதவி மையங்கள் கீழ்க்காணும் இடங்களில் 10.01.2022 முதல் இயங்க உள்ளன.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தகவல்!!!**

**இது மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தாவது,**

தமிழகத்தில் தற்போது கொரோனா நோய் தொற்று அதிகரித்து வரும் நிலையில் திருப்பூர் மாவட்டத்திலும் கொரோனா நோய் தொற்று பாதிப்பு எண்ணிக்கை அதிகரித்து வருவதால், கொரோனா நோய் தொற்றாளர்கள் தங்களது சிகிச்சைக்காக எந்த மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்பது தெரியாமல் அலைக்கழிக்கப்படுவதை தவிர்க்கும் பொருட்டும், அவர்களுக்கு சரியான வழிகாட்டுதல் வழங்கி உரிய நேரத்தில் சரியான சிகிச்சை பெற உதவும் நோக்கிலும் திருப்பூர் மாவட்டத்தில் திருப்பூர் மாநகராட்சியில் 4, ஊரக பகுதிகளில் 15 ஆக மொத்தம் 19 உதவி மையங்கள் கீழ்க்காணும் இடங்களில் 10.01.2022 முதல் இயங்க உள்ளன.

**திருப்பூர் மாநகரம் :**

| வ.எண். | மாநகராட்சி | உதவி மையத்தின் பெயர் |
|---|---|---|
| 1. | திருப்பூர் மாநகராட்சி 1 மண்டலம் | சிறுபூலுவப்பட்டி , சமுதாயக்கூடம்,வார்டு எண்.14 |
| 2. | திருப்பூர் மாநகராட்சி 2 மண்டலம் | ஜெ.ஜெ.நகர், வாவிபாளையம், சமுதாயக்கூடம், வார்டு எண்.18 |
| 3. | திருப்பூர் மாநகராட்சி 3 மண்டலம் | விஜயாபுரம் சமுதாயக்கூடம், வார்டு எண்.15 |
| 4. | திருப்பூர் மாநகராட்சி 4 மண்டலம் | பழவஞ்சிபாளையம், சமுதாயக்கூடம், வார்டு எண்.52 |

**ஊரக பகுதிகள் :**

| வ.எண். | வட்டாரம் | உதவி மையத்தின் பெயர் |
|---|---|---|
| 1. | அவனாசி | ஆரம்ப சுகாதார நிலையம், சேவூர் |
| 2. | திருப்பூர் | ஆரம்ப சுகாதார நிலையம், |

| | | |
|---|---|---|
| | | பெருமாநல்லூர் |
| 3. | பல்லடம் | ஆரம்ப சுகாதார நிலையம்,<br>செம்மிபாளையம் |
| 4. | பொங்கலூர் | ஆரம்ப சுகாதார நிலையம், பொங்கலூர் |
| 5. | குடிமங்கலம் | ஆரம்ப சுகாதார நிலையம், குடிமங்கலம் |
| 6. | உடுமலைப்பேட்டை | ஆரம்ப சுகாதார நிலையம்,<br>எரிசனம்பட்டி |
| 7. | மடத்துக்குளம் | ஆரம்ப சுகாதார நிலையம்,<br>கொமரலிங்கம் |
| 8. | தாராபுரம் | ஆரம்ப சுகாதார நிலையம்,<br>பொன்னாபுரம் |
| 9. | மூலனூர் | ஆரம்ப சுகாதார நிலையம், மூலனூர் |
| 10. | குண்டடம் | ஆரம்ப சுகாதார நிலையம்,<br>தாயம்பாளையம் |
| 11. | காங்கயம் | ஆரம்ப சுகாதார நிலையம்<br>, நத்தக்கடையூர் |
| 12. | ஊத்துக்குளி | ஆரம்ப சுகாதார நிலையம், குன்னத்தூர் |
| 13. | வெள்ளகோவில் | ஆரம்ப சுகாதார நிலையம்,<br>வெள்ளகோவில் |
| 14. | உடுமலை<br>நகராட்சி | நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம்,<br>உடுமலை. |
| 15. | தாராபுரம் | நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம்,<br>தாராபுரம். |

மேற்படி உதவி மையங்களில் நோய் தொற்று உறுதியானவர்களின் நிலையை பரிசோதனை செய்து அவர்களது நிலைக்கேற்ப அரசு மருத்துவமனைகளுக்கோ கோவிட் சிறப்பு சிகிச்சை மையங்களுக்கோ அனுப்பிவைக்கப்படுவர்.

எனவே, பொதுமக்கள் தங்களுக்கு நோய் தொற்று உறுதியான உடன் நேரடியாக அரசு மருத்துவமனைக்கு செல்ல வேண்டாம் எனவும், மேற்காண் உதவி மையங்களில் தங்களுக்கு அருகாமையில் உள்ள மையத்தை பரிசோதனை முடிவுகளுடன் அணுகி உரிய வழிகாட்டுதல் பெற்று அந்த மையங்களில் உள்ள மருத்துவர்கள் வழிகாட்டுதல்படி அரசு/தனியார் மருத்துவமனைகளுக்கோ கோவிட் சிறப்பு சிகிச்சை மையங்களுக்கோ அல்லது வீட்டு தனிமைக்கோ செல்லுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என்று திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத்.,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**